**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.S.சப்னா, B.B.M.L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்.**
**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12 ஆம் நாள்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.197/2015**
**CNR.No.TNTI11– 000221 –2015**

அரசுக்காக:
காவல்ஆய்வாளர்,
பல்லடம், காவல்நிலையம்
(குற்ற எண்.825/2014) – குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1) கார்த்திக் (வயது 25),
த/பெ. மருதையன்,
பர்மாகாலனி,
திருவெறும்பூர், திருச்சி.
**<u>தற்போதைய முகவரி</u>**
க.எண்.1/385 விநாயகர் கோவில் வீதி,
அறிவொளி நகர், பல்லடம்.

2) நாகேந்திரன் (வயது 24),
த/பெ. மோகன்குமார்,
ஈஸ்வரன் கோவில் பின்புறம்,
திருப்பூர்.
**<u>தற்போதைய முகவரி</u>**
க.எண்.1/929 மாரியம்மன் கோவில் வீதி,
அறிவொளி நகர்,
பல்லடம். .... எதிரிகள்

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.197/2015**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice – 2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1) Karthick<br>2) Nagendhiran | 27.11.2014<br>27.11.2014 | 03.06.2015<br>06.05.2015 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 21.10.2014 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 23.09.2015 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 457,380 of IPC as the case may be | 12.07.2016 | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | Cmp.No.5338/2014 | 23.12.2014 | Allowed |
| | | Cmp.No.736/2015 | 17.02.2015 | Allowed |
| | | Cmp.No.2607/2015 | 02.06.2015 | Allowed |
| | | Cmp.No.4354/2015 | 22.07.2015 | Allowed |
| | | Cmp.No.2137/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2138/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2139/2017 | 12.04.2017 | Allowed |
| | | Cmp.No.2607/2015 | 12.05.2015 | Allowed |
| | | Cmp.No.3002/2017 | 14.06.2017 | Allowed |
| | | Cmp.No.3003/2017 | 14.06.2017 | Allowed |
| | | Cmp.No.4127/2018 | 29.08.2018 | Allowed |
| | | Cmp.No.4128/2018 | 29.08.2018 | Allowed |
| | | Cmp.NO.5506/2022 | 15.12.2022 | Allowed |
| | | Cmp.No.418/2024 | 03.09.2024 | Allowed |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Mayilvahannan | 04.01.2021 | - |
| | | PW2- Porutselvan | 09.03.2026 | 09.03.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the | | | 23.03.2026 |

| | | |
|---|---|---|
| | Code | |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | Nil |

இந்த வழக்கானது கடந்த 23.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசுகுற்றத்துறை வழக்கறிஞர் நிலை 1 திரு.எஸ்.செந்தில்குமார், அவர்களும், 1ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.திருக்குமரன், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. ராஜேஷ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் வழக்குஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

(1)கடந்த 17.10.2014ம் தேதி இரவு சுமார் 11.00 மணிக்கு பல்லடம் பகுதிக்குப்பட்ட பல்லடம், டவுன் ரஹிம்சா வீதியில் உள்ள சாட்சி மயில்வாகனம் என்பவருடைய வீட்டுக்குள் எதிரிகள் கார்த்திக், நாகேந்திரன் ஆகியோர் ஆதாய நோக்கத்துடன் உள்ளே நுழைந்து பணம் ரூ.6500/- மற்றும் செல்போன்கள் மூன்று ஆகியவற்றை திருடி சென்றதாக பல்லடம், காவல் நிலைய காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 457, 380ன் கீழ் தாக்கல் செய்த குற்ற அறிக்கையை பார்வையிட்டு பரிசீலனை செய்து அவ்வாறே வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

(2)எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவருக்கு அரசு தரப்பில் சார்ந்து நின்ற ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ் இலவசமாக கொடுக்கப்பட்டு, மேலும் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து குற்றம் பற்றி விளக்கி கூறி வினவியபோதும் எதிரிகள் குற்றத்தையும், குற்றச் சாட்டுகளையும் மறுத்து கூறி வழக்கு விசாரணையை வேண்டினார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

(3)அரசுதரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்கும் வகையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் அ.சா.பொ.1 ம் குறியீடு செய்யப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகள் பின்வருமாறு:

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

4)இவ்வழக்கானது பல்லடம், ராஜீம்ஷா வீதியை சேர்ந்த மயில்வாகனன் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் தான் பல்லடம் ராஜீம்ஷா வீதியில் அவரது மனைவி சந்திரமதி மகன்கள் சதீஷ்குமார், விக்னேஷ்வரா மாமனார் நல்லதம்பி ஆகியோருடன் குடியிருந்து கொண்டு பல்லடம் புளூபேர்ட்ஸ் ஸ்கூல் அருகில் TV ரிப்பேர் சரி செய்யும் கடை வைத்துள்ளதாகவும் அவரது மகன்கள் இருவரும் வேலைக்கு செல்வதாகவும் கடந்த 17.10.2014 ம் தேதி இரவு 10.00 மணிக்கு வழக்கம் போல் அனைவரும் சாப்பிட்டு படுத்து தூங்கிவிட்டதாகவும் பின் 18.10.2014 ம் தேதி காலை 6.00 மணியளவில் எழுந்து பார்த்தபோது பீரோ திறந்து துணியெல்லாம் கீழே விழுந்து இருந்தது பீரோவில் அ.சா.1 வைத்திருந்த பணம் ரூ.6000/–த்தை பார்க்க அது திருடுபோயிருந்தது மேலும் இரண்டு உண்டியல்கள் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் சுமார் ரூ.600/– களவு போயிருந்தது மேலும் அ.சா.1 வைத்திருந்த 9600216360 என்ற செல்போனும், அவரது மனைவி வைத்திருந்த 7200216047 என்ற செல்லும் அவரது மாமனார் நல்லதம்பி வைத்திருந்த 9447193608 என்ற செல்லும் காணாமல்போய் இருந்தது மூன்றும் நோக்கியோ செல்போன் என்றும் அதன் மதிப்பு ரூ.1500/– இருக்கும் அவர்கள் தூங்கி பின் வீட்டில் வந்து யாரோ திருடிபோய் உள்ளதாக அவரது உறவினர்கள் போலீசில் புகார் கொடுக்க சொன்னார்கள் 21.10.2014 ம் தேதி பல்லடம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறியுள்ளார்.

5)இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.2 பொருட்செல்வன், காவல்ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 21.10.2014 ஆம் தேதி பல்லடம் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காவலர் 1786 திரு.கண்ணன் என்பவர் 21.10.2014 ஆம்தேதி 13.00 மணிக்கு நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது மயில்வாகனம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று பல்லடம் காவல் நிலைய குற்ற எண்825/2014 பிரிவுகள் 457,380 இதசவின் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே 14.00 மணிக்கு வாதி சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சாட்சிகள் முகமது ரபீக் மற்றும் முகமது சபீக் ஆகியோர்கள் முன்பு பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைப்படம் தயார் செய்ததாகவும் சாட்சிகள் மயில்வாகனம், சந்திரமதி, நல்லதம்பி, முகமது ரபீக் மற்றும் முகமது சபீக் ஆகியோரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பார்வைக்கு வைத்ததாகவும் தற்போது அவர் இறந்துவிட்டதால் அவருடன் பணியாற்றியதால் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்கு பரிட்சயம் ஆகையால் காவல் நிலைய கோப்பினை பார்வையிட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிப்பதாகவும் காவல் ஆய்வாளர் திரு.சுப்பிரமணியம் 27.11.2014 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு அறிவொளி நகர் தொட்டி அப்புச்சி கோவில் பஸ் ஸ்டாப் அருகில் குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளை கண்டுபிடிக்க வேண்டி காவல் ஆய்வாளர் மற்றும் காவலர்கள் சகிதம் கண்காணித்துக் கொண்டிருந்த போது பின்னர் பெயர் விலாசம் தெரிந்த கார்த்திக் த/பெ.மருதையன் அறிவொளி நகர் பல்லடம் என்பவர் தனது இடது பக்க தோல்பட்டையில் ஒரு பேட்டிரியை தூக்கி கொண்டும், அவருக்கு பின்னால் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து நாகேந்திரன் த/பெ.மோகன் குமார் என்பவர் பேசிக்கொண்டும்

அறிவொளி நகர் பக்கத்தில் இருந்து தொட்டி அப்புச்சிகோவில் நோக்கி வந்துக் கொண்டிருந்தவர்கள் போலீசாரை காண்டவுடன் பேட்டரியை கீழே போட்டுவிட்டு எதிரி நாகேந்திரன் என்பவருடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க இருவரும் பல்லடம் காவல் நிலைய சரக திருட்டு குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தெரிந்து அவர்களை விசாரிக்க அவர்கள் இருவரும் தான் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டவர்களை விசாரிக்க எதிரிகளில் எதிரி நாகேந்திரன் என்பவர் அவருடைய இடுப்பில் ஒரு பிளாஸ்டிக் கவரில் மூன்று செல்போன்கள் வைத்திருந்ததாகவும் மேற்படி செல்போன் மற்றும் பேட்டரி சம்மந்தமாக விசாரித்த போது பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 236/2014 சட்டப்பிரிவுகள் 457,380 இதச மற்றும் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 825/2014 சட்டப்பிரிவுகள் 457,380 இதச வழக்குகளில் சம்மந்தப்பட்டிருப்பது தெரியவந்து காலை 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து கைது செய்து ஆஜர் சாட்சிகள் குமார் மற்றும் குமாரசாமி ஆகியோர் முன்னிலையில் 1ஆம் எதிரி கார்த்திக் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நோக்கியா கருப்பு மற்றும் பிரவுன் கலர் செல்போன் ஒன்று மற்றும் Hello city என்று எழுதப்பட்ட வெள்ளை கருப்பு கலர் என்ற நோக்கியா செல்போன் ஒன்று , மஞ்சள் மற்றும் கருப்பு Hello city என்று எழுதப்பட்ட செல்போன் ஒன்று கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும் அந்த மூன்று செல்போன்கள் அ.சா.பொ.1 என்றும் எதிரி கார்த்திக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப் பட்ட பகுதி அ.த.சா.ஆ.5. என்றும் கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6 என்றும் எதிரிகளை மற்றும் வழக்கு சொத்துடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும் வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும் அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.7 என்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் குமார் மற்றும் குமாரசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 457,380 இதசவின் பிரிவில்

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

**<u>கு.வி.மு.சபிரிவு 313(i)(b)ன் கீழ் எதிரிகளிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில் :</u>**

6)அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரிகள் சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**<u>7)அரசு தரப்பு வாதம்:</u>**

அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் எதிரிகள் மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்த அதிகாரியான அ.சா.2 சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு மற்றும் அரசுதரப்பு சான்றாவணங்கள் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீது பிரிவுகள் 457, 380 இதசவின் கீழான குற்றம் நிரூபணம் செய்யப் பட்டு விட்டதாகவும், எனவே, எதிரிகள் மீது பிரிவுகள் 457,380 இதசவின் கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>எதிரிகள் தரப்பு வாதம் :</u>

8)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப் பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றச் சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 240ன் கீழ் வினவிய போது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுதரப்பு வழக்கை மறுத்துள்ளார்கள். எதிரிகளுக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(i)(b)பிரிவின் கீழ் எதிரிகளிடம் வினவிய போது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்றும், இவ்வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது

என்பதும், எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதும் அரசு தரப்பில் தகுநிலை ஐயத்திற்கு அப்பாற் பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று தெரிவித்தார்.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

9)இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீதான குற்றச் சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபிக்கப் பட்டுள்ளதா? என்று பார்க்கும்போது, அ.சா.1 மயில்வாகனன் அவரது சாட்சியத்தில் கடந்த 14.07.2014 ம் தேதி இரவு தூங்கிவிட்டு அடுத்த நாள் காலை எழுந்து பார்த்த போது தங்களை வீட்டினுள் அடைத்து வெளிபுறமாக யாரோ தாழிட்டு சென்றிருந்தார்கள் என்ன நடந்தது என்று பார்த்தபோது 3 செல்போன்கள் பீரோவில் வைத்திருந்த பணம் ரூ.6 ஆயிரம் ஆகியவை திருடு போயிருந்தது என்றும் சத்தம் போட்டு பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து தங்கள் வீட்டை திறந்துவிட்டார்கள் அதன்பின்னிட்டு காவல் நிலையம் சென்று அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாகவும் அ.சா.1 சொல்ல காவல் நிலையத்தில் உள்ள ஏட்டையா எழுதிக் கொண்டதாகவும் இதுகுறித்து பின்னிட்டு 2 மாதம் கழித்து காவல் நிலையத்திலிருந்து அ.சா.1 ஐ அழைத்து வீட்டில் திருடுபோன செல் போன் மூன்றும் கிடைத்து விட்டதாகவும் அவற்றை நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார்கள் ஆனால் இன்றுவரை அ.சா.1 ன் வீட்டிலிருந்து களவுபோன செல்போன்களை பெற்றுச் செல்லவில்லை என்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

10)அ.சா.1 அவரது புகாரில் பணம் ரூ.6000 மும் உண்டியலில் வைத்த பணம் ரூ.600/-ம் காணாமல் போயிருப்பதாக கூறிவிட்டு அவரது சாட்சியத்தில் பணம் ரூ.6000 ஆயிரம் காணாமல் போனதாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்ட நபர்களையோ, பார்வை மகசர்

சாட்சிகளையோ, எதிரிகளை கைது செய்தபோது உடனிருந்த நபர்களையோ இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்காமல் அரசு தரப்பில் கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11)மேலும், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1ன் சாட்சியத்தின் மூலம் அரசுத் தரப்பு வழக்கிற்கு ஆதரவான பதில் எதுவும் பெறப் படவில்லை என்றும் இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகள் தான் ஈடுபட்டார்கள் என்பதாகவோ, எதிரிகளை அடையாளப்படுத்தும் விதமாக ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. மேலும் இவ்வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பதும் அரசு தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரித்து நிரூபிக்காத நிலையில் எதிரிகள் மீதான போதுமான சாட்சி சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீதான குற்றச் சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12)முடிவில் எதிரிகள் மீதான பிரிவுகள் 457, 380 இதசவின் கீழான குற்றச் சாட்டுக்களிலிருந்து குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக் கிறது.

13)இவ்வழக்கு சொத்துக்களான அ.சா.பொ.1 நோக்கியோ கருப்பு மற்றும் ப்ரௌன் கலர் செல்போன் ஒன்று 2) வெள்ளை கருப்பு கலர் KPS என்று பொறிக்கப்பட்ட நோக்கியா செல்போன் ஒன்று 3)மஞ்சள் கருப்பு கலர் நோக்கியோ HelloCity என்ற செல்போன் ஒன்று இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டு இந்நீதிமன்ற பி.ஆர்.எண்.109/2015 ஆக பி.ஆர் செய்யப் பட்டுள்ளதை அதன் உரிமையாளர் உத்தரவு தேதியிலிருந்து 1 மாதத்திற்குள் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அரசுக்கு ஆதாய மாக்கப்படும் என இதன் மூலம் உத்தரவிடப் படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் வருடம் மார்ச் திங்கள் 26ம் நாள் வியாழக்கிழமை அன்று அவையறிய திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.03.26 17:40:48 +0530

நீதித்துறைநடுவர்,
பல்லடம்.

<u>**அரசுத் தரப்பு சாட்சியங்கள்**</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 04.01.2021 | திரு.மயில்வாகனன் த/பெ. அழகர்சாமி – புகார்தாரர் |
| அ.சா.2 | 09.03.2026 | திரு.பொருட்செல்வன்,காவல்ஆய்வாளர்–புலன் விசாரணை அதிகாரி |

<u>**அரசு தரப்பு சான்றாவணங்கள்**</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 /அ.சா.1 | 21.10.2014 | புகார் |
| அ.சா.ஆ.2 /அ.சா.2 | 21.10.2014 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 /அ.சா.2 | 21.10.2014 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4/அ.சா.2 | 21.10.2014 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5/அ.சா.2 | 27.11.2014 | எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப் பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 /அ.சா.2 | 27.11.2014 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 /அ.சா.2 | 27.11.2014 | படிவம் 91 |

<u>**அரசு தரப்பு சான்று பொருட்கள்**</u>

**அ.சா.பொ.1** – 1) நோக்கியோ கருப்பு மற்றும் ப்ரௌன் கலர் செல்போன் ஒன்று 2)வெள்ளை கருப்பு கலர் KPS என்று பொறிக்கப்பட்ட நோக்கியா செல்போன் ஒன்று 3)மஞ்சள் கருப்பு கலர் நோக்கியோ Hello City என்ற செல்போன் ஒன்று

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை</u>**

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.26 17:40:54 +0530

**நீதித்துறைநடுவர்,**
**பல்லடம்.**

**குறிப்பு:**

1) எதிரிகள் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.

3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4) வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

5)தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.